# ஏர் பின்னது உலகம்




தமிழ்நாட்டில் தொழில்வளம் சிறக்க பல நடவடிக்கைகளை எடுத்தது போலவே, வேளாண்மை செழித்தோங்குவதற்கான செம்மையான செயல்பாடுகளை மேற்கொண்ட காவிரி மண்ணின் மைந்தரான முத்தமிழறிஞர் கலைஞர், தனது ஆட்சிக்காலத்தில் 41 அணைகளைக் கட்டினார்.

விவசாயத்திற்கு மும்முனை மின்சாரத்தை இலவசமாக வழங்கிய கலைஞரின் திட்டத்தால், ஆறுகள் வறண்ட காலத்திலும் வயல்களில் பம்புசெட் மூலம் தண்ணீர் பாய்ந்தது. நிலத்தில் விளைந்தவற்றை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வதற்கு ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தை உருவாக்கினார்.

நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் மூலம் அரசே விவசாயிகளிடமிருந்து நெல் மூட்டைகளைப் பெற்றது. அதனை பொது விநியோகத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு சீராக வழங்கியதால், விவசாயிக்கும் உரிய விலை கிடைத்தது.

மக்களுக்கும் உரிய வகையில் உணவு தானியம் கிடைத்தது. காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் மாநிலங்களுக்கிடையே சுமூக தீர்வும், தமிழ்நாட்டுக்குரிய தண்ணீரைப் பங்கிடவும் காவிரி நடுவர் மன்றத்தை அமைத்திட கலைஞர் மேற்கொண்ட சட்டரீதியான முயற்சிகளே இன்றளவும் தமிழ்நாட்டின் டெல்டா மாவட்டங்களுக்கு பயன் தந்து வருகிறது.

சோழ மன்னர்கள் காலத்திற்குப் பிறகு, டெல்டா மாவட்ட ஆறுகள் பலவும் கலைஞர் ஆட்சிக்காலத்தில் தூர் வாரப்பட்டன.

தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களில் விளையக்கூடிய உணவுப் பயிர்கள், பயறு வகைப் பயிர்கள், வணிகப் பயிர்கள் என அனைத்து வகைப் பயிர்களின் வளர்ச்சிக்கும் ஏற்ற வகையில் ஆராய்ச்சி மையங்களை உருவாக்கி, குறைந்த பரப்பில்குறைந்த காலத்தில் அதிக விளைச்சல் கிடைக்கச் செய்தார்.

உழவர்கள் தாங்கள் விளைவித்த காய்கறிகளை இடைத்தரகர்களின் இடைஞ்சல் இல்லாமல் நேரடியாக பொதுமக்களிடம் விற்பதற்கு வசதியாக கலைஞர் கொண்டு வந்த உழவர் சந்தை திட்டம் வேளாண்மையில் தற்சார்பு நிலைக்கான சிறந்த எடுத்துக்காட்டாகும்.



# கனவை நனவாக்கிய கலைஞர் பட்டா

ஒவ்வொருவருக்கும் தங்கள் குடும்பம் வாழ்வதற்கு சொந்தமாக ஒரு நிலம் வேண்டும் என்ற எண்ணம் உண்டு. ஏழைகளுக்கு அது கனவு. அவர்களின் கனவை நனவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர். அரசு புறம்போக்கு நிலங்களில் தொடர்ந்து 5 ஆண்டுகளாக குடியிருப்போருக்கு அந்த மனையை அவர்களுக்கே சொந்தமாக்கித் தரும் வகையில் பட்டா வழங்கும் திட்டத்தை கலைஞர் அரசு செயல்படுத்தியது. பின்னர், 3 ஆண்டுகள் வசித்திருந்தாலே வீட்டு மனைப் பட்டா என்ற நிலையையும் கலைஞர் உருவாக்கினார். அவருடைய ஆட்சிக்காலத்தில் 8 லட்சத்து 30ஆயிரத்து 495 ஏழைக் குடும்பத்தினருக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டது. இதை 'கலைஞர் பட்டா' என்றே மக்கள் அழைத்தனர். வீட்டு மனை போலவே, விவசாய நிலங்களையும் உழுபவர்களுக்கே வழங்கிடும் வகையில், குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம் மூலம் ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் ஏக்கர் நிலங்களை உழவர்களுக்கு சொந்தமாக்கினார் கலைஞர். இரத்தம் சிந்தி பெற வேண்டிய உரிமையை ஒரு துளி மையால் கையெழுத்திட்டு சாதித்திருக்கிறார் கலைஞர் என்று கம்யூனிஸ்ட் தலைவர் மணலி கந்தசாமி இதனைக் குறிப்பிட்டார்.



# திராவிட மாடல் ஆட்சியில், 23 இலட்சத்து 56 இலட்சம் இலவச பட்டா




கலைஞர்பட்டாதிட்டம்பின்னர்வந்தஆட்சியாளர்களால் பின்பற்றப்படவில்லை. தொடர்ந்து 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் ஏழைகள் வீட்டு மனைப் பட்டா கிடைப்பதற்கு போராடினர். 'திராவிட மாடல்' ஆட்சியில், 5 ஆண்டுகளில் 23 இலட்சத்து 56 இலட்சம் ஏழை மக்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டதுடன்,

இந்த மனையில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கு தலா மூன்றரை இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டது.




# வேளாண்மைக்கென தனி பட்ஜெட் தாக்கல்!




திராவிட மாடல் ஆட்சியில் வேளாண்மைக்கென தனி பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. 2021 தொடங்கி 2025 வரை 5 ஆண்டுகளும் மேட்டூர் அணை சரியாக ஜூன் 12ஆம் நாள் திறக்கப்பட்டது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே முன்னின்று அதனைத் திறந்து வைத்தார். டெல்டா மாவட்டங்களின் கடைமடை வரை தண்ணீர் பாய்வதற்கேற்ப தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நெல் உற்பத்தி அதுவரை இல்லாத அளவுக்கு சாதனை அளவைத் தொட்டது. மரபுவழி விவசாயம், நவீன விவசாயம் ஆகிய இரண்டுக்கும் உரிய முக்கியத்துவம் தரப்பட்டு, விவசாயிகளுக்கான இடுபொருட்கள், கருவிகள் ஆகியவை வழங்கப்பட்டன.

# சமூக நீதிப் போராளி

தன் வாழ்நாள் முழுவதும் சமூக நீதிக்கானப் போராட்டத்தை முன்னெடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது சட்டநாதன் ஆணையத்தை அமைத்து அதன் பரிந்துரைகளைப் பெற்று, பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டை 31 விழுக்காடாகவும், பட்டியல் இன பழங்குடி மக்களுக்கான இடஒதுக்கீட்டை 18 விழுக்காடாகவும் உயர்த்தியவர் கலைஞர்.




பின்னர், 1989ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோருக்கு 30% மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவை உருவாக்கி, அதில் 108 சாதிகளை இணைத்து 20%, பட்டியல் இனத்த வ ருக்கு 18%, பழங்குடி இனத்தவருக்கு 1% என 69% இடஒதுக்கீட்டிற்கு வழி வகுத்தவர் கலைஞர். அதுமட்டுமின்றி, பிற்படுத்தப் பட்டோருக்கான 30% இட ஒதுக்கீட்டில் சிறுபான்மை முஸ்லி ம்களுக்கு 3.5%, பட்டியல் இனத்த வருக்கான 18% இடஒதுக்கீட்டில் அருந்ததியர்களுக்கு 3% என உள்ஒதுக்கீடு வழங்கியவரும் கலைஞர்தான்.

தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது குறிப்பிட்ட பகுதியையோ, குறிப்பிட்ட சாதியையோ மட்டும் சார்ந்ததல்ல என்பதையும், அனைத்து சமூகத் தினரும் வாய்ப்பு பெற்று உயர வேண்டும் என்பதிலும் மிகவும் கவனமாக இருந்து, சட்டச்சிக்கல் இல்லாமல் சமூக நீதியை நிலைநாட்டிடப் போராடி, அதனை சாதித்துக் காட்டியவர் கலைஞர். அதுமட்டுமின்றி, ஒன்றிய அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில், மண்டல் கமிஷன் பரிந்துரைப்படி, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 27% இடஒதுக்கீட்டை நிலைநாட்ட பிரதமர் வி.பி.சிங் அவர்களிடம் வலியுறுத்தி, அதனையும் நிறைவேற்றிக் காட்டியதில் கலைஞரின் பங்கு மகத்தானது.

# முழு ஆரோக்கியத்திற்கு முட்டையுடன் சத்துணவு



பள்ளி மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் 1921ஆம் ஆண்டு திராவிட இயக்கத்தின் முதல் அரசியல் அமைப்பான நீதிக்கட்சி ஆட்சியிலேயே சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டது. காமராஜர் ஆட்சியில் மாநிலம் தழுவிய அளவில் மதிய உணவுத் திட்டமாகவும், எம்.ஜி.ஆர். ஆட்சியில் சத்துணவுத் திட்டமாகவும் முன்னெடுக்கப்பட்ட நிலையில், 1989ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்ற முத்தமிழறிஞர் கலைஞர், மாணவ சமுதாயத்தின் உடல் நலனில் அக்கறை கொண்டு, முட்டையுடன் சத்துணவு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார். முதலில், வாரம் ஒரு முட்டை எனத் தொடங்கப்பட்ட இத்திட்டம் 2006ஆம் ஆண்டில் கலைஞர் ஆட்சியில் வாரம் 5 முட்டைகள் என்ற நிலையை எட்டியது. முட்டை சாப்பிடாத மாணவர்களுக்கு வாழைப்பழம் வழங்கப்பட்டது. இந்தியா முழுவதுமே குழந்தைகளுக்கு புரதச் சத்து குறைபாடு இருந்த காலத்தில், தமிழ்நாட்டில் கலைஞர் கொண்டு வந்த சத்துணவுடன் கூடிய முட்டை திட்டத்தினால், பள்ளி மாணவர்களுக்குப் போதுமான அளவில் புரதச் சத்து கிடைத்தது. அவர்களின் உடல்நலன் ஆரோக்கியமாகத் திகழ்ந்தது. முட்டையுடன் சத்துணவு சாப்பிட்டு பள்ளிப்படிப்பை முடித்து, பின்னர் உயர்கல்வி கற்று தற்போது உயர்ந்த பொறுப்புகளில் உள்ள பலர், தங்கள் வாழ்க்கை அனுபவத்திலிருந்தே இதனைப் பெருமையுடன் விளக்குகிறார்கள்.

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

திராவிட மாடல் நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில், இந்தியாவிலேயே முதன்முறை யாக பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது. காலையில் சமைப்பதற்கு வசதி யில்லாத வீடுகள், பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்லும் குடும்பங்கள் இவற்றால் ஆரம்பப்பள்ளிக்கு வரும் மாணவர்கள் உடல் சோர்வடைந்து படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் போவதை நேரில் கண்டதால் உருவானது தான் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம். குழந்தைகளுக்குத் தேவையான அனைத்து சத்துகளும் கொண்ட காலை உணவுத் திட்டத்தை பிற மாநிலங்களும், வெளிநாடுகளும் கூட இப்போது நடைமுறைப்படுத்தியுள்ளன.



# உயர் படிப்பில் 27 சதவீதம் இடஒதுக்கீடு



அனைத்து வேலைவாய்ப்புகளிலும் இடஒதுக்கீடு சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை உறுதி செய்தது திராவிட மாடல் அரசு. அது மட்டுமின்றி, மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றிய அரசுக்கு ஒதுக்கப்படும் இடங்களிலும் இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கான 27% இடஒதுக்கீட்டை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காக தி.மு.க.வின் சார்பில் சட்டப்போராட்டம் நடத்தி அதனை நிலைநாட்டியவர் திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

# உரத்து முழங்கிய மாநில சுயாட்சி

இந்தியாவில் உண்மையான கூட்டாட்சி அமைய வேண்டுமென்றால், மாநிலங்கள் சுயாட்சியுடன் இருக்க வேண்டும் என்பதுதான் அண்ணா வழியில் ஆட்சி நடத்திய முத்தமிழறிஞர் கலைஞரின் நிலைப்பாடாகும். 1969ல் முதலமைச்சர் பொறுப்பேற்றதும், ராஜமன்னார் குழுவை அமைத்து, மாநில சுயாட்சிக்கானப் பரிந்துரைகளைப் பெற்றார். 1974ல் அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றினார். இத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றிய முதல் மாநிலம் தமிழ்நாடுதான். மாநில சுயாட்சியின் அடையாளமாக சுதந்திர தினத்தில் அந்தந்த மாநிலத் தலைமைச் செயலகத்தில் அந்தந்த மாநில முதலமைச்சரே கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத் தந்தவர் கலைஞர். தேசிய கீதம் போல மாநிலப் பாடலாக தமிழ்த்தாய் வாழ்த்தை அறிமுகப்படுத்தி, அரசு நிகழ்ச்சிகளில் அதை இசைக்கும்போது அனைவரும் எழுந்து நிற்கச் செய்தார். திருவள்ளுவர் ஆண்டுக் கணக்கு, தமிழுக்கு செம்மொழித் தகுதி ஆகியவையும் தமிழ்நாடு எனும் மாநிலத்தின் தனித்த அடையாளங்களாகத் திகழும்படி செய்த பெருமை கலைஞருக்கேயுரியது.



# சாதி ஏற்றத்தாழ்வை ஒழித்த சமத்துவபுரங்கள்




இந்தியாவின் மிகப் பெரிய சமூகச் சிக்கலாக இருப்பது சாதிப்படிநிலைக் கட்டமைப்பு. பிறக்கும்போது சாதி முத்திரைக் குத்தப்பட்டு உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பேதம் காட்டும் வருணாசிரமத்திற்கு மாற்றாக, அனைவரும் சமம் என்பதை வலியுறுத்தும், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்கிற தமிழ் மறையாம் திருக்குறள் நெறிப்படி, எல்லா சாதிகளும் ஒன்றிணைந்து ஒரே இடத்தில் வாழ்வது என்பது பெருங்கனவும், நடைமுறையில் மிகப் பெரிய சிக்கலும் உடையதாகும். எனினும், அதனை சாத்தியமாக்கியவர் கலைஞர். தென்மாவட்டங்களில் சாதிக் கலவரங்கள் நடந்த நிலையில், மக்களின் மனமாற்றமும், அதற்கேற்ற ஒருங்கிணைந்த வாழ்வுமே சாதி ஏற்றத்தாழ்வற்ற சமூகத்தைக் கட்டமைக்கும் என்ற எண்ணத்துடன் முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்நாடெங்கும் சமத்துவ புரங்களை உருவாக்கினார்.

அதற்கு பெரியார் நினைவு சமத்துவபுரம் எனப் பெயரிட்டார். 100 வீடுகள் கொண்ட இந்த சமத்துவபுரத்தில் அதிக அளவில் பட்டியல் இன மக்களுக்கும், அதனைத் தொடர்ந்து பிற்படுத்தப்பட்டவர்கள், மிகப் பிற்படுத்தப்பட்ட வர்கள், பிற சாதியினர் என அனைவருக்கும் வீடுகள் ஒதுக்கப்பட்டன. அந்த வீடுகள் அவரவர் குடும்பத்தில் உள்ள பெண்களின் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டன. அனைத்து சாதிகளுக்கும் பொதுவான சமூக நலக் கூடம், பூங்கா ஆகியவை அமைக்கப்பட்டன. இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும், இது போல அனைத்துச் சாதியினரும் ஒரே இடத்தில் கூடி வசிக்கக்கூடிய நிலை இல்லை. கலைஞர் உருவாக்கிய சமத்துவபுரங்கள் தமிழ்நாட்டின் தனித்துவ அடையாளமாகும்.

# புதுப்பித்த புதிய சமத்துவபுரங்கள்



கலைஞர் ஆட்சியில் துணை முதலமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் அவர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட சமத்துவபுரங்களையும் அதன் முகப்பில் நிறுவப்பட்ட பெரியார் சிலையையும் திறந்து வைத்தார். மாநிலம் முழுவதுமே சாதி பேதமற்ற சமத்துவபுரங்களாக அமைய வேண்டும் என்ற தன் விருப்பத்தை வெளிப்படுத்தினார். 'திராவிட மாடல்' ஆட்சியில் சமத்துவபுரங்களைப் புதுப்பித்ததுடன், புதிய சமத்துவபுரங்களையும் திறந்து வைத்தார்.




# மாநில சுயாட்சி – நீதிபதி குரியன் ஜோசப் அறிக்கை

திராவிட மாடல் ஆட்சியில் மாநில சுயாட்சி மற்றும் கூட்டாட்சித் தத்துவத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், ஒன்றிய, மாநில உறவுகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்க ஓய்வு பெற்ற நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்து என்பது மாநிலத்தின் பாடலாக அரசாணை வெளியிடப்பட்டு, அதனை இசைக்கும் முறை, அதற்கு தர வேண்டிய மரியாதை ஆகியவை வரையறுக்கப்பட்டது. சட்டமன்றத்தில் ஆளுநர் உரையின்போது தமிழ்த்தாய் வாழ்த்துதான் முதன்மையாக இடம்பெறும் என்பதில் திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் உறுதியாக இருந்து அதனை நிறைவேற்றினார்.